பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 11 புதன்கிழமை 25.05.2022 கதிர் 94

## பஸ் கட்டண உயர்வு இன்று முதல் அமுல்

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, இன்று முதல் பஸ் கட்டணங்கள் 19.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 350 பிரிவுகளின் பயணக் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

☞2

# ரணில் வசம் நிதி அமைச்சு

## கோட்டா முன்னிலையில் இன்று பதவிப்பிரமாணம்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இன்று முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் இடம்பெற்றது.

☞2

## 'மே - 09' வன்முறை; 1,708 பேர் சிக்கினர்

### 751 பேர் விளக்கமறியலில்

நாட்டில் மே - 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் ஆயிரத்து 708 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவர்களில் 751 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏனையோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

## சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு

சிற்றுண்டிகளின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக சிற்றுணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பானது அனைத்துப் பொருள்களுக்கும் தாக்கம் செலுத்துகின்றது. எனவே, நூற்றுக்கு 10 சதவீதத்தால் சிற்றுணவகங்களின் உணவு மற்றும் பானங்களின் விலைகளை அதிகரிக்குமாறு சிற்றுணவக உரிமையாளர்களிடம் கோருகின்றோம் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதனை விடவும் விலையை அதிகரிக்க வேண்டாம். ஏனெனில், வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடல்!

நாடளாவிய ரீதியில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாள்களில் வாடிக்கையாளர்கள் உள்ளிட்ட வெவ்வேறு தரப்பினர் எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட தகாத நடவடிக்கைகள் காரணமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன என்று அறிய முடிகின்றது.

## தகாத உறவு முரண்பாடு; பெண் வெட்டிக்கொலை!

புத்தளம், வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து பெண்ணொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவு குறித்து ஏற்பட்ட முரண்பாடொன்றின் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக

☞2

### வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில்

## விசேட ஜனாதிபதி ஆணைக்குழு: சுயாதீன எம்.பிக்கள் வலியுறுத்து



நாட்டில் இம்மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.

கடிதம் ஒன்றில் மூலம், அந்த ஒன்றியத்தின் உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ,

☞2

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பலருக்கு இராஜாங்க அமைச்சு

### அமைச்சர் அமரவீர தகவல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் எதிர்காலத்தில் இராஜாங்க அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

இந்தத் தகவலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவரும் கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



அமைச்சில் வைத்து இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

## 6 வாரங்களுக்குள் இடைக்கால பட்ஜட்

### ரணில் அறிவிப்பு



எதிர்வரும் 6 வாரங்களுக்குள் இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று பிரதமரும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

☞2

## 140 லீற்றர் பெற்றோலுடன் ஓட்டோ சாரதி மாட்டினார்!

பதுளை - ஹாலி எல பகுதியில் 140 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உடுவர பகுதியிலுள்ள வீதித்தடையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது சட்டவிரோதமான முறையில் பெற்றோலைக் கொண்டு சென்ற ஓட்டோ சாரதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹாலி - எல பகுதியைச் சேர்ந்த 41 வயதானவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ராஜபக்ஷக்களின் பாதுகாவலர்களாக இருப்பதா? அல்லது மக்களின் பாதுகாவலர்களாக இருப்பதா?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்விக்கணை



சந்தர்ப்பவாத அரசியலைக் கடைப்பிடித்து ராஜபக்ஷ குடும்பத்தின் காவலராக மாறுவதா அல்லது கொள்கை அடிப்படையில் மக்கள் சேவையில் ஈடுபடுவதா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாக்கும் தலைமை செயல் அதிகாரியாகவோ

☞2

## '21' திருத்தத்துக்கு வாசுவும் பேராதரவு

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு முழுமையாக ஆதரவளிக்கப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதையும்,

☞2



## பஸ் கட்டண உயர்வு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
27 ரூபாவாக காணப்பட்ட குறைந்தபட்ச கட்டணம் 32 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து 22 ரூபாவாகக் காணப்பட்ட சாதாரண சேவையின் ஆகக்கூடிய கட்டணம் 2 ஆயிரத்து 417 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டண அதிகரிப்புக்கு அமைய, கொழும்பிலிருந்து கண்டிக்கான சாதாரண சேவைக் கட்டணம் 457 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 760 ரூபாவாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கொழும்பு முதல் யாழ்ப்பாணத்துக்கான சாதாரண சேவைக் கட்டணம் 1,438 ரூபாவாகவும், அரை சொகுசு சேவைக் கட்டணம் 1,799 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 2 ஆயிரத்து 400 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு முதல் நுவரெலியாவுக்கான சாதாரண சேவைக் கட்டணம் 711 ரூபாவாகவும், அரை சொகுசு சேவைக் கட்டணம் 888 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 1,185 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அதிகவேக நெடுஞ்சாலை பேருந்துகள் மற்றும் அதிசொகுசு பஸ்களின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## ரணில் வசம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் இதன்போது கலந்துகொண்டார்.

முன்னதாக, நிதி அமைச்சர் பதவிக்காக முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்றி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இதுவரை எவரும் தீர்க்கமான ஒரு முடிவை அறிவிக்காமையால், நாட்டில் தற்போது நிலவும் பாரிய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நிதி அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை காணப்பட்டது.

அதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் பதவியை ஏற்றுள்ளார்.

## 6 வாரங்களுக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டு வருட நிவாரணத் திட்டத்துக்கு நிதி திரட்டுவதற்காக உட்கட்டமைப்புத் திட்டங்களை ரத்துச்செய்யத் தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

‘ரொய்ட்டர்ஸ்’ செய்திச் சேவைக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## விசேட ஜனாதிபதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண உள்ளிட்ட 8 பேர் கையொப்பமிட்டு, குறித்த கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## தகாத உறவு முரண்பாடு:...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வண்ணாத்திவில்லுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ராஜபக்ஷக்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அல்லது அதன் உறுப்பினராகவோ இருக்கத் தாம் ஒருபோதும் தயாராக இல்லை எனவும் அவர் கூறினார்.

திருட்டுகள் குறித்து கோப் குழுவில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த அரசும் திருடர்களைப் பாதுகாப்பதையே மேற்கொள்கின்றது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ‘21’ திருத்தத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவிகள் வகிப்பதையும் தடுக்கும் ஏற்பாடு கட்டாயம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய பிரதமரைத் தெரிவு செய்த அணுகுமுறையைத் தமது கட்சி அனுமதிக்காது எனவும், அதனால்தான் அரசில் இணையவில்லை எனவும் ஊடகங்களிடம் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குவிப்பும் குறைப்பும்!

நாட்டின் புதிய நிதி அமைச்சராகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்டுள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று இந்த இரண்டரை வருட காலத்துக்குள் இவர் நாலாவது நிதியமைச்சர்.

தமது சொந்தக் கட்சியில் அல்லது ஐக்கிய தேசிய முன்னணியில் தாம் அரசு அமைத்தபோது கூட, பிரதமர் பதவியுடன் நிதி அமைச்சை ரணில் தம்வசம் வைத்திருக்க வில்லை. இப்போது ஒற்றை எம்.பியாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த அவர் பிரதமர் பதவியுடன் நிதி அமைச்சர் பதவியையும் பெறுவதற்கு வழி செய்திருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷவிற்கு பின்னர் பிரதமர், நிதியமைச்சர் ஆகிய இரண்டு பதவிகளையும் ஒரே சமயத்தில் வகிக்கும் கௌரவம் ரணிலுக்குத்தான் கிடைத்திருக்கின்றது.

நிதி அமைச்சுப் பதவியை புதிய ஒருவருக்கு வழங்குவதற்காக 'ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல' காத்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது திடுதிப்பென மனதை மாற்றி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதனை கையளிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு இருக்கின்றார்.

அதற்கு காரணம் உண்டு.

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு, சமாளிக்க முடியாத இக்கட்டு நிலைக்குள் மாட்டிக் கொண்டுள்ளது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றிடம் சரணடையும் நிலைமை. அவை விரைந்து உதவ முன்வந்தால்தான் நாடு மூச்சுவிட முடியும். அது தாமதமாக தாமதமாக, நிலைமை இன்னும் இன்னும் மோசமடையும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் பிணை எடுக்குமாறு கோரி சரண் அடைவதில் தாமதம் காட்டப்பட்டமை தவறு, அத்தவறுக்குத் தாமே காரணம் என்று நாட்டு மக்களிடம் ஏற்கனவே பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைமை ஜனாதிபதிக்கு. இந்தப் பின்புலத்தில் மேலும் தாமதத்துக்கு இடமளிக்க முடியாது.

நாட்டில் ஸ்திரமான அரசு, தேவையான பொருளாதாரக் கொள்கைகளுடனான கட்டமைப்பு, நேர்த்தியான பொருளாதார கொள்கைகளை ஒழுங்காகக் கையாளக் கூடிய நிர்வாகம் போன்றவை இல்லாமல் இலங்கைக்கு உதவ முடியாது என்று உலக வங்கி ஏற்கனவே கொழும்புக்கு எச்சரிக்கை அறிவிப்பு – சிவப்பு நோட்டீஸ் – கொடுத்து விட்டது.

அமைச்சரவை இல்லை, நிதியமைச்சர் இல்லை, நிதி விடயத்துக்கு பொறுப்பு கூறக்கூடிய கட்டமைப்பு ஏற்பாடுகள் இல்லை என்று நிலைமையை இன்னும் இழுத்தடித்தால் உலக வங்கி தனது கதவை விரைவில் இறுக மூடிக் கொண்டு போய் விடும் என்பது புரிந்தமையால் பிரதமர் ரணிலை நிதி அமைச்சராகவும் நியமித்து உலக வங்கிக்குப் படம் காட்டப் புறப்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

மானியங்கள், உதவிகள், நன்கொடைகள் என்ற பெயரில் அரசு நிதியை வீணாக்கும் திட்டங்களை உடனே முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்று உத்தரவும் தெளிவான அறிவுறுத்தல்களும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து வந்துள்ளன எனக் கூறப்படுகிறது. அதனால்தான் எரிபொருளுக்கு ஒரு சதம் மானியம் கூட இல்லாமல் அதனை விநியோகிப்பதற்கு அரசு இந்த விலை அதிகரிப்பை இப்போது செய்திருக்கிறது. இனி, எரிபொருள் இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு என்ன செலவோ அதை அப்படியே நுகர்வோரிடம் இருந்து கறந்தெடுக்கும் ஒழுங்கு வந்துவிட்டது.

அடுத்து அரசு ஊழியர்கள் 6 லட்சம் பேரைக் கணிசமாகக் குறையுங்கள், படைக்குத் தேவையில்லாமல் ஆள்களைக் குவித்து பெருமளவு நிதியை வீணாக்கும் நடவடிக்கையை நிறுத்தி, ஆள் குறைப்புச் செய்யுங்கள் என்றெல்லாம் பணிப்புரைகள் ஜாடைமாடையாக சர்வதேச நிதியத்திடம் இருந்து வரத் தொடங்கி விட்டன எனக் கேள்வி.

நாணய நிதியத்தின் இசைக்கு நடனமாட கொழும்பு இணங்கி விட்டமையால் இவற்றையெல்லாம் செய்துதானாக வேண்டும். படைக் குவிப்புத் தவறு, தவறு என்று நாங்கள் சொன்ன போதெல்லாம் ராஜபக்ஷக்கள் காதில் அது விழவில்லை. இப்போது 'மணி கட்டின மாடாக' சர்வதேச நாணய நிதியம் அதைக் கூறுகின்றது. அதனால் படைக் குறைப்புச் செய்துதானாக வேண்டும். வேறு என்ன வழி....?

# அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்வதற்கு கட்சியின் மத்தியகுழு அனுமதி வழங்கவில்லை

## மைத்திரி திட்டவட்ட அறிவிப்பு



புதிய அரசாங்கம் முன்வைக்கும் முற்போக்கான திட்டங்களுக்கு ஆதரவளிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இருப்பினும் தற்போதைய அரசாங்கத்தில் எந்த அமைச்சுப் பதவியையும் ஏற்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்குள்ளும், நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் மக்கள் சார்பில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்வதற்கு கட்சியின் மத்திய குழு அனுமதி வழங்கவில்லை என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# 2021 ஆம் ஆண்டுக்கான 5 ஆம்தர புலமைப்பரிசில் பரீட்சை பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியானது

2021 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, பிரபல பாடசாலைகளுக்கு தரம் 6 இல் மாணவர்களை சேர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி 22ஆம் திகதி நடத்தப்பட்ட நிலையில், மார்ச் 13 ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 லட்சத்து 40 ஆயிரத்து 508 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமையுடன் 2 ஆயிரத்து 943 பரீட்சை நிலையங்களிலும் 108 விசேட நிலையங்களிலும் பரீட்சை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# 625 கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியிலான மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையில்!

மருந்துகளை உரிய முறையில் களஞ்சியப்படுத்தாதமையின் காரணமாக 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையில் 625 கோடி 90 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகின. இந்த மருந்துகள் பயன்பாட்டுக்குப் பொருத்தமல்லாதவை என அடையாளம் காணப்படும்போது 99 வீதமானவை நோயாளிகளுக்கு அவை வழங்கப்பட்டுள்ளமை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தரமற்ற மருந்துகளுக்கான செலவை வங்குநர்களிடமிருந்து அறிவிட்டுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

ஒளடதங்களின் உறுதித்தன்மை காணப்படும் வகையில், உரிய தரத்தில் அவற்றை களஞ்சியப்படுத்த முடிந்தளவு விரைவில் வசதிகளை ஏற்படுத்துமாறும் கோபா குழு விதப்புரை வழங்கியுள்ளது.

மருந்து வழங்கல் பிரிவுக்குச் சொந்தமான களஞ்சியங்களில் வெப்பநிலையை முறையாகப் பேணிவராமை மற்றும் மருத்துவ வழங்கல்கள் மத்திய ஒளடத களஞ்சியத்தினதும் வைத்தியசாலைகளினதும் நடைக்கூடங்களில் வைக்கப்பட்டுள்ளமையையும் குழு அவதானித்துள்ளது.

மருந்துகள் கிடைத்தவுடன் அவை தரமற்றவையென அடையாளம் காண்பதற்கான முறையியலொன்று காணப்படின் அதற்கான நட்டத்தை வழங்குநர்களின் உத்தரவாதத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்ள முடியுமெனவும், அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் மூலமாக 60 வகையான மருந்துகளின் தரத்தைப் பரிசோதனை செய்ய முடிந்தால் இந்த நிலைமையை ஓரளவிற்கேனும் தவிர்த்துக் கொள்ள முடியும் என அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ வழங்கல் பிரிவு தரமற்ற மருந்துகள் அல்லது மருத்துவ வழங்கல்களுக்கான செலவுகளை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக உரிய வழங்குநர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் செயலாளருக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையை அதன் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கடந்த 20ஆம் திகதி சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 2021.08.04 தொடக்கம் 2021.11.19 வரையான காலப்பகுதியில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பான விடயங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# கொரிய மொழிப் பரீட்சைக்குத் தோற்ற 31 ஆயிரத்து 378 பரீட்சார்த்திகள் தகுதி

2022 கொரிய மொழி பரீட்சைக்குத் 31,378 விண்ணப்பதாரர்கள் தகுதி பெற்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அதன்படி தினமும் 4 குழுக்கள் கணினி அடிப்படையிலான பரீட்சைக்கு தோற்றவுள்ளன என பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பன்னிபிட்டிய கணினி நிலையத்தில் பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தென் கொரிய தொழிலுக்காக இளைஞர், யுவதிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான 2022 ஆண்டுக்கான கொரிய மொழி பரீட்சை மே 23 திகதியன்று ஆரம்பமானது.

இலங்கையில் நடத்தப்படும் ஐந்தாவது கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சை இதுவாகும்.

பரீட்சை முடிவுகள் இரண்டு கட்டங்களாக வெளியிடப்படும் மற்றும் முதல் 7 ஆயிரம் விண்ணப்பதாரர்களின் முடிவுகள் ஜூலை 5 ஆம் திகதியன்று வெளியிடப்படவுள்ளது.

# துப்பாக்கிச் சூட்டில் 18 பள்ளிக் குழந்தைகள் சாவு

# ஆயுத தடைச் சட்டத்தை கடுமையாக்கும் நேரம் இது என அமெரிக்க அதிபர் பேச்சு!




அமெரிக்காவில் சமீபகாலமாக கல்விக் கூடங்களில் அதிகரித்து வரும் துப்பாக்கிக் கலாச்சாரம் ஆயுத சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். டெக்சாஸ் மாகாணத்தில் பள்ளி ஒன்றில் இளைஞர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 18 குழந்தைகள் உட்பட 21 பேர் உயிரிழந்தனர். இது குறித்து வொஷிங்டன் டி.சியில் பேசிய அதிபர் ஜோ பைடன், பள்ளி மாணவர்கள் கொல்லப்பட்ட தகவலை அறிந்து பெரும் அதிர்ச்சி அடைந்து இருக்கிறேன் என கூறினார். இது போன்ற சம்பவங்களால் நாடு முழுவதும் ஆயுதங்கள் தடைச் சட்டம் கடுமையாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருப்பதாக பைடன் கூறினார்.

மேலும் பேசிய அவர், ஏன் இந்த படுகொலைகள்? இது போன்ற படுகொலைகளுடன் வாழ நாம் ஏன் தயாராக இருக்கிறோம்? இது போன்ற சம்பவங்கள் ஏன் நடைபெறுகின்றன? இதை சமாளிப்பதற்கும், ஆயுத கடத்தல் காரர்களை எதிர்ப்பதற்கும் துணிச்சல் நமக்கு ஏன் இல்லை. பெற்றோர் தற்போது அனுபவித்து வரும் வலியை ஆயுதங்களுக்கு எதிரான செயலாக மாற்ற வேண்டிய நேரம் இது,என்றார். பள்ளிக் குழந்தைகள் 18 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி தனது இதயத்தை தூள் தூள்ளாக்கி இருப்பதாகவும் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார். இது போன்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் இனிமேலும் நிகழாமல் தடுக்க துணிச்சலான முடிவுகளை பைடன் அரசு எடுக்கும் என்றும் கமலா ஹரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## உலக சுகாதார அமைப்புக்கு டெட்ரோஸ் மீண்டும் தலைவரானார்




உலகசுகாதாரஅமைப்புக்கு 2வது முறையாக டெட்ரோஸ் அதனோம் தலைவரானார். எத்தியோப்பியாவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான டெட்ரோஸ் அதனோம், உலக சுகாதார அமைப்பின் தலைவராக இருக்கிறார். இவருடைய பதவிக்காலம் முடிந்து விட்டது. தற்போது, 2வது முறையாக இந்த அமைப்பின் தலைவர் பதவிக்கு அவர் போட்டியிட்டார். அவரை எதிர்த்து யாரும் போட்டியிடவில்லை. இதனால், அவர் ஒருமனதாக மீண்டும் இந்த அமைப்பின் தலைவராகி உள்ளார். கொரோனா பரவல் விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக இவர் செயல்பட்டார் என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம்சாட்டியதால் சர்ச்சை ஏற்பட்டது.

இருப்பினும், கொரோனா வைரஸ் தொற்றின் போது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உலக நாடுகளின் கேள்விகளுக்கு பதிலளித்து உலக சுகாதார அமைப்பை டெட்ரோஸ் திறம்பட வழிநடத்தினார்.

இதன் காரணமாக, தலைவர் பதவியில் இருந்து டெட்ரோஸை மாற்றுவதற்கு பல நாடுகள் தயாராக இல்லை. இதனால், உலக சுகாதார அமைப்பின் தலைவராக தனது 2வது பதவிக் காலத்தை அவர் தொடங்கி உள்ளார். உலக சுகாதார அமைப்பை வழி நடத்தும் முதல் ஆபிரிக்கர் மற்றும் மருத்துவராக தகுதி பெறாத ஒரே தலைவர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

## மாதம் 750 ரூபா மாத்திரம் செலுத்தினால் நாடெங்கும் பஸ், ரயில்களில் பயணிக்கலாம்

### ஜேர்மனி அரசு அசத்தல்

*ஒரு மாதத்திற்கு கட்டணமாக ரூ.750 செலுத்தினால், நாடெங்கும் பேருந்து மற்றும் ரயில்களில் இலவசமாக பயணித்துக்கொள்ளும் வகையிலான புதிய திட்டத்தை ஜேர்மனி அரசு அறிமுகம் செய்துள்ளது. மேலும் ஓகஸ்டில் இருந்துவரை இத்திட்டம் அமுலில் இருக்கும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை கடுமையாக அதிகரித்துள்ளதால் பொதுப் போக்குவரத்தை அதிக மக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக அரசு சார்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.*



## அமெரிக்காவில் தொடரும் பயங்கரம்:

## பள்ளிக்குள் துப்பாக்கிச் சூடு 21 பேர் பரிதாபகரமாக சாவு




அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் இளைஞர் ஒருவர் 18 பள்ளி குழந்தைகள் உட்பட 21 பேரை சுட்டுக் கொன்ற சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. டெக்சாஸ் மாகாணத்தில் சான் அன்டோனியோவிற்கு மேற்கே 85 மைல் தொலைவில் உள்ள உவால்டேயில் உள்ள ராப் என்ற தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. நேற்று முற்பகல் அங்கு வகுப்புகள் நடந்து கொண்டு இருந்தபோது, பள்ளிக்குள் நுழைந்த 18 வயது இளைஞர் ஒருவர் திடீரென அங்கு இருந்த மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டார்.

உடனடியாக பள்ளி ஆசிரியர்களும் பிற ஊழியர்களும் அவரை பிடிக்க முயன்ற போது, அவர்கள் மீதும் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த டெக்சாஸ் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய இளைஞரை சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவம் குறித்து பேசிய டெக்சாஸ் ஆளுநர் கிரேக் அபாட்,'துப்பாக்கிச் சூடு நடத்தியவர் உவால்டேயில் வசிக்கும் 18 வயதான இளைஞர் சால்வடார் ராமோஸ் ஆவார். அவர் தனது வாகனத்தை பள்ளியின் வெளியே நிறுத்திவிட்டு ராப் தொடக்கப் பள்ளிக்குள் கைதுப்பாக்கியுடன் நுழைந்துள்ளார்.

அவர் ஒன்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை வைத்து இருந்தார் எனவும் தெரிகிறது. இந்த துப்பாக்கிச் சூட்டில் பள்ளி வளாகத்திலேயே 14 மாணவர்கள் கொல்லப்பட்டனர். ஆசிரியர்கள் சிலரும் உயிரிழந்தனர்.துப்பாக்கிச் சூடு நடத்திய இளைஞர் ராமோஸ் பொலிஸாரின் பதில் தாக்குதலால் கொல்லப்பட்டான்,'என்றார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் மொத்தம் 18 குழந்தைகளும் 3 ஆசிரியர்களும் பரிதாபமாக உயிரிழந்தனர்.படுகாயம் அடைந்த 8 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் குறித்து டெக்சாஸ் பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இன்று சூரிய அஸ்தமனம் வரை வெள்ளை மாளிகை மற்றும் பிற பொது கட்டடங்களில் அமெரிக்கக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள் அவர்களின் வளர்ச்சிக்கு அரசு உறுதுணையாக இருக்கும்

## முதல்வர் ஸ்டாலின் உரை



மாநில அளவிலான முதல் இளைஞர் திறன்திருவிழாவைசென்னைராணிமேரி கல்லூரியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். பின்னர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த பொருள்களையும் பார்வையிட்டார். பின்னர் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் நாட்டிலேயே முதன்முறையாக தொடங்கப்பட்ட 3 மகளிர் கல்லூரிகளில் ராணி மேரி கல்லூரியும் ஒன்று. தமிழ்நாட்டிலேயே முதல் மகளிர் கல்லூரி ராணி மேரி கல்லூரி தான். ராணி மேரி கல்லூரியை இடிக்க முன்னாள் முதலமைச்சர்ஜெயலலிதாமுயற்சித்தார். ராணிமேரிகல்லூரியை இடிக்கக் கூடாது என பேராசிரியர்கள், மாணவர்கள் போராட்டம் நடத்தினர்.

ராணி மேரி கல்லூரியில் அத்துமீறி நுழைந்தேன் என அப்போது நான் கைது செய்யப்பட்டேன். புகழ்பெற்ற ராணி மேரி கல்லூரியில் ரூ.3.2 கோடியில் கலைஞர் மாளிகை கட்டப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் கலைஞர் மாளிகையின் பெயர் நீக்கப்பட்டது. இளைஞர்கள் தான் நாட்டின் முதுகெலும்பாக இருக்கின்றனர். நாட்டின்வளர்ச்சிஎன்பதுஇளைஞர்களை நம்பியே இருக்கிறது. இளைஞர் சக்தியை ஊக்குவிக்கும் கல்வியை அளிக்க வேண்டும். இளைஞர்களின் தகுதிக்கேற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டின் திறன் மேம்பாட்டு இயக்கத்தை உருவாக்கியவர் கலைஞர். வேலை இல்லை என்ற நிலையையும், வேலைக்கு தகுதியுள்ள இளைஞர் என்ற நிலையையும் மாற்ற முயற்சித்து வருகிறோம்.

இளைஞர்களை திறன் மிக்கவர்களாக்க தொடங்கப்பட்ட கனவுத் திட்டம் தான் நான் முதல்வன் திட்டம். மாணவர்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு அதற்கேற்ப தங்களுக்கு வேலைவாய்ப்பை தேடிக் கொள்ள நான் முதல்வன் திட்டம். நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 10 ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு கல்வி, அறிவு, திறனை உயர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 21ம் நூற்றாண்டுகளுக்கான திறன்களை வழங்கி இளைஞர்களை திறன்மிக்கவர்களாகமாற்றவேண்டும். தமிழ்நாட்டின் மாணவர்கள் மிகவும் திறமையானவர்கள் அவர்களின் வளர்ச்சிக்கு அரசு உறுதுணையாக இருக்கும்.

நாட்டிலேயே முதல் முறையாக தருமபுரியில் தொடங்கப்பட்டது மகளிர் சுய உதவுக்குழு திட்டம். இளைஞர்கள் வாழ்வுக்கு மேலும் பலம் சேர்க்கும் நோக்கில் இளைஞர் திறன் திருவிழா நடைபெறுகிறது என தெரிவித்துள்ளார்.





## மங்களூருவில் இடிக்கப்பட்ட மசூதி பகுதியில் கோவில் அம்சங்கள் இருக்கின்றனவாம்?

### 144 தடை உத்தரவு

கர்நாடகாவில் ஹிஜாப் மற்றும் ஹலால் பிரச்சினையைத் தொடர்ந்து கோவிலின் மீது மசூதி கட்டப்பட்டு இருப்பதாக இந்துத்துவா அமைப்புகள் புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளன. மங்களூரில் உள்ள மாலலி என்ற இடத்தில் கேரள முறைப்படி கட்டப்பட்ட மதானி ஜும்மா மசூதியின் ஒரு பகுதி புனரமைப்பு பணிக்காக மசூதி நிர்வாகத்தினரால் இடிக்கப்பட்டது. இந்த புனரமைப்பு பணியின் போது, அதில் இந்து கோவில் இருந்ததற்கான அம்சங்கள் காணப்படுகின்றன என விஷ்வ இந்து பரித் அமைப்பினர் உரிமைக் கோரினர். 2 வாரங்களுக்கு முன்பு மங்களூரு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த அந்த அமைப்பினர் மசூதி அமைந்துள்ள நிலம் கோவில் நிலம் என்று கூறி தடையாணை பெற்றனர்.

மாலலி பகுதியில் உள்ள ஆஞ்சிநேயர் கோவிலில் குறி கேட்கும் பூஜையை விஷ்வ இந்து பரித் அமைப்பினர் நடத்தி வருவது சர்ச்சையை கிளப்பியுள்ளது. மசூதி உள்ள இடத்தில் கோவில் உள்ளதா? இல்லையா? என்பதைக் கண்டறிய கேரளாவில் இருந்து கோபால் கிருஷ்ணா என்ற பூசாரியை வரவழைத்து குறி கேட்டு வருகின்றனர். ஏற்கனவே ஹிஜாப் பிரச்சினை ஹலால் இறைச்சி பிரச்சினையை கிளப்பிய இந்து அமைப்பினர் கோவில் வளாகங்களில் இஸ்லாமியர்களுக்கு கடை வைக்க அனுமதி மறுத்தும் பிரச்சினை செய்தனர். தற்போது தொல்லியல் துறை, அரசு, நீதிமன்றம் ஆகியவற்றை மதிக்காமல் பூசாரியை அழைத்து வந்து குறி கேட்கும் பூஜை நடத்தி வருவது பெரும் சர்ச்சையையும் கண்டனங்களையும் கிளப்பி வருகிறது. அந்த பகுதியில் பதற்றம் நிலவுவதால் 144 தடை உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளது.

## சசிகலா தலைமையில் அ.தி.மு.க. செயல்படுமாம்

### சென்னையில் பேட்டி



என் தலைமையில் அ.தி.மு.க. செயல்படும் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது என சசிகலா தெரிவித்துள்ளார். சென்னையில் அ.தி.மு.க. நிர்வாகி குணசேகரனின் இல்ல திருமண விழாவில் சசிகலா கலந்துகொண்டார். திருமண மண் டபத்திற்கு வருகை தந்த சசிகலாவுக்கு செண்டை மேளம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து மண்டபத்திற்கு முன்பு வைக்கப்பட்ட எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் மணமக்களை வாழ்த்திய அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு புரட்சித் தலைவரும், அம்மா ஜெயலலிதாவும் மக்களுக்காக செயல்பட்டனர். என் தலைமையில் அதிமுக செயல்படும் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அ.தி.மு.கவில் என்னை இணைக்க முடியாது என சொல்வதற்கு அவர்கள் யார்? அ.தி.மு.கவில் எல்லோரும் என்னை எதிர்த்து பேசவில்லை. ஒருசிலர் தான் பேசுகிறார்கள். அ.தி.மு.கவின் முக்கிய நிர்வாகிகள் என்னுடன் பேசிக்கொண்டு தான் இருக்கின்றனர். யார் என்பதை வெளியில் சொல்ல முடியாது. அ.தி.மு.கவில் இணைவது தொண்டர்களின் கையில் தான் உள்ளது.

நான் தொண்டர்களையும் பார்க்கிறேன், மக்களையும் பார்க்கிறேன். அ.தி.மு.க. தலைவர் தொண்டர்களால் தேர்வு செய்யப்படும் அந்த நிலைமை தற்போது இல்லை. அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக சரியாக செயல்படவில்லை. ஆட்சியாளர்களின் செயல்பாடுகளை வெளிப்படுத்துவது பத்திரிக்கையாளர் கடமை. பிரதமர் தமிழகத்திற்கு வர உரிமை உள்ளது எனவும் கூறினார்.

## திருப்பதியில் வீடு கட்டும் பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டது

திருப்பதியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஜெகன் அண்ணா வீடு கட்டும் திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் துணை முதல்வர் நாராயணசாமி உத்தரவிட்டுள்ளார்.

திருப்பதி கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி திட்ட பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாநில துணை முதல்வர் நாராயணசாமி தலைமை தாங்கினார். அப்போது, அவர் பேசியதாவது:-

அனைத்து மக்களும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நமது முதல்வர் ஜெகன்மோகன் நவரத்தினா திட்டத்தை அமுல்படுத்தினார். இதனால், மாநில மக்கள் அதிக பலன்களை பெற்று மகிழ்ச்சியாக உள்ளனர். ஜெகன் அண்ணா வீடு கட்டும் பணிகளை விரைந்து முடித்து பயனாளிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகளை வழங்க வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.



இதில், சுற்றுலாத்துறை அமைச்சரும், நடிகையுமான ரோஜா, எம்.பி. குருமூர்த்தி, எம்.எல்.ஏ. கருணாகரன், காளஹஸ்தி எம்.எல்.ஏ. மதுசூதனன், கூடூர் எம்.எல்.ஏ. வரப் பிரசாத், திருப்பதி கலெக்டர் வெங்கடரமணா, இணை கலெக்டர் பாலாஜி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்காமல் தடுத்த நடவடிக்கை

## ஆசிரியர் சங்க மட்டு. பிரதிநிதிகள் சீற்றம்




மட்டக்களப்பில் உள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் அரசமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடு என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன். உதயரூபன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் பல சிரமங்களுக்கு மத்தியில் கா.பொ. த. சாதாரண தர பரீட்சை நடைபெற்று வருகின்றது. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்கள் பரீட்சையைச் சவாலாக எடுத்துத் தோற்றியுள்ளனர்.

கடந்த காலத்தில் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட நிலையிலும் போக்குவரத்துப் பிரச்சினைகள் உட்பட பல்வேறு நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள நிலையிலும் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படாமல் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு தடுக்கப்பட்டமை மூலம் இலங்கை அரசமைப்பின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. இது தொடர்பில் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர்களுக்கு கட்டாயக்கல்வி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் தொழில்நுட்ப ரீதியான விசேட செயற்றிட்டங்கள் கல்வி கொள்கையில் உள்ளன. இவ்வாறான நிலையில் இதற்கான முழுப் பொறுப்பையும் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் ஏற்றுக் கொள்ள வேண்டும். – எனவும் அவர் தெரிவித்தார்.

## தரித்து நிற்கும் ட்றோலரில் போதைப்பொருள் விற்பனை

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மீன்பிடித் துறைமுகத்தில் படகு ஒன்றில் இருந்து 09 கிராம் 210 மில்லிகிராம் ஹெரோயினும் 01 கிராம் 110 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளும், விசேட அதிரடிப் படையினரால் கடந்த ஞாயிறு மாலை கைப்பற்றப்பட்டுள்ளன.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, விசேட அதிரடிப் படையுடன் இணைந்து இராணுவ புலனாய்வு பிரிவினர், வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ட்றோலர் படகை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இதன்போது மேற்படி போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. அங்கு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிறைந்துறைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞனை இராணுவ புலனாய்வு பிரிவினர் கைதுசெய்து, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## மட்டு. மாநகர சந்தைக் கட்டடத்துக்கு சூரிய மின்சாரம் பெறும் கட்டமைப்பு




(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாநகர சபையால் சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறும் வேலைத்திட்டம் உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைய மட்டக்களப்பு மாநகரசபை சந்தைக் கட்டடத் தொகுதியின் மேல் கூரையில் இந்த சூரிய மின் பிறப்பாக்கி தகடுகள் பொருத்தப்படுவதற்கான கள ஆய்வுகள் கடந்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்டன. சுமார் 80 லட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் இந்த சூரிய மின் திட்டத்தின் மூலம் 40 கிலோ வாட்ஸ் அளவிலான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் சந்தைத் தொகுதி முழுவதற்குமான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு, இதனால் மாநகர சபைக்கு வருவாயையும் ஈட்டக் கூடியதாக இருக்கும் என மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## இடர் களைய வேண்டி ஆலயங்களில் இடர் களையும் பதிகம் பாடும் திட்டம்

### தேசிய ரீதியில் காரைதீவு சித்தாலயத்தில் ஆரம்பம்



(காரைதீவு நிருபர் சகா)

நாட்டில் சமகாலத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடி, உணவு தட்டுப்பாடு போன்ற இடர்களைய வேண்டி ஆலயங்களில் இடர் களையும் பதிகம் பாடும் பாரிய திட்டம் ஒன்று தேசிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனின் ஒழுங்கமைப்பில் நாடு முழுவதிலும் தெரிவுசெய்யப்பட்ட ஆலயங்களில் இது நடைபெறவுள்ளது.

இதன் முதல் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவில் கடந்த வார இறுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சித்தானைக்குட்டி சுவாமி ஆலயமும், சித்தானைக்குட்டி அறநெறிப் பாடசாலையும் இணைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும், திருநெடுங்களத்தலத்து இடர் களையும் பதிகம் ஓதும் நிகழ்வும் சித்தானைக்குட்டி ஆலயத்தில் ஆலயத்தின் தலைவர் பொன்.பாலந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு உபதலைவர் க.தட்சணாமூர்த்தி, பொருளாளர் த.தவக்குமார், உபசெயலாளர் திரு செ.விஜயரெத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்களான சீ.யோகராஜா, பி. கபாஸ்கர் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவலோஜி சிவராஜா மற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற்கொண்டார்.

## ‘ஊடகர் நடேசன் நினைவலைகள்’ தொகுப்பு நூல் ஞாயிறன்று வெளியீடு



மட்டக்களப்பில் வைத்து 2004 ஆண்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது ஞாபகார்த்த தினம், எதிர்வரும் 31 ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ளது.

அதனை முன்னிட்டு, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் ஞாபகார்த்த நிகழ்வும் ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெறவுள்ளன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் இ.தேவஅதிரன் தலைமையில், மட்டக்களப்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணியளவில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதனைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உப தலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இ.பாக்கியராஜாவும், நூல் வெளியீட்டுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவஅதிரனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கு அனைத்து ஊடகவியலாளர்களையும், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் கலந்துகொள்ளுமாறு, ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் அழைப்பு விடுத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# குறைந்த வருமானத்தை பெறும் 33 லட்சம் பேருக்கு நிவாரணம்

## அரசாங்கம் அறிவிப்பு

அதிகரிக்கின்ற பொருள் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 33 லட்சம் பேருக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ், இம்மாதம் முதல் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா முதல் 7 ஆயிரத்து 500 ரூபா வரையிலான நிதியுதவியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 17 லட்சத்து 65 ஆயிரம் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், 7 லட்சத்து 30 ஆயிரம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் முப்பத்து மூன்று லட்சம் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களும் இந்த பலனை அனுபவிக்கும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக அடுத்த வாரம் மே மாதத்துக்கான உதவித்தொகையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 30 கோடி அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி பயனாளிகளுக்கு மூன்று மாத காலத்துக்கு நிவாரணம் வழங்க இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் அலுவலகம் மற்றும் நிதி அமைச்சின் பணிப்புரையின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தை வழிநடத்துவதில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் முக்கிய பங்காற்றுகின்றது.

இதன்படி, சமுர்த்தி உதவி பெறுகின்ற குடும்பங்கள் உட்பட அனைத்து பயனாளிகளின் குடும்பங்களுக்கும் மாதாந்த கொடுப்பனவை நேரடியாக அவர்களது சொந்த வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமுர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் 500 வரை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இயங்கி வரும் சமுர்த்தி வங்கிகள் ஊடாக பணத்தை பெறுவதற்கு அவர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

# எரிந்தநிலையில் சடலமாக 20 வயது இளைஞன் மீட்பு!

மர்மமான முறையில் உயிரிழந்த 20 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் வனப்பகுதி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் நிராவிய தேக்குமர வனப்பகுதியில் இருந்து சடலம் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் உடலில் வெட்டுக்காயங்கள் மற்றும் தீக்காயங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் தேவனம்பியதிஸ்ஸபுர பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். திங்கட்கிழமை இரவு 11.30 மணி வரை குறித்த இளைஞன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார் என உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை காலை வீட்டில் அந்த இளைஞன் இல்லாததால் உறவினர்கள் பிரதேசத்தில் உள்ள தேவாலயத்துக்குச் சென்று தேடியுள்ளனர்.

அவர் அங்கு இல்லாததால் அநுராதபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது மேற்படி இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எரிந்து உயிரிழந்த இளைஞனின் சடலத்திற்கு அருகில் இருந்து அவரது கைத்தொலைபேசி மற்றும் லைட்டர் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உபகரணங்கள் எதுவும் எரியவில்லை என்பதுடன், அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலா அபிவிருந்தி அதிகாரசபை தலைவர் கிமர்லியும் இராஜினாமா!

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரான கிமர்லி பெர்னாண்டோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் ஒப்படைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிமர்லி பெர்னாண்டோ இராஜினாமாக் கடிதத்தில் –

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவராக 30 மாத கால பயணம் முடிவுக்கு வந்துள்ளது. தற்போதைய அமைச்சரிடம் எனது இராஜினாமாக் கோரிக்கையுடன், இலங்கை சுற்றுலாத்துறைக்கு நாளை ஒரு சிறந்த நாளாக அமைய அனைத்து பங்குதாரர்களுக்கும் தொடர்புடைய தரப்பினருக்கும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஆதரவளித்து, ஆலோசனை வழங்கிய, நலம் பெற வாழ்த்திய உங்கள் அனைவருக்கும், நன்றி. கடந்த 30 மாதங்களாக எமது தாய் நாட்டின் மதிப்பை ஆக்கபூர்வமாக்க முடிந்ததை அறிந்தே நான் இன்று (நேற்று) புறப்படுகிறேன். – என தெரிவித்துள்ளார்.

# 600 லீற்றர் எரிபொருளை பதுக்கி வைத்தவர் மாத்தறையில் சிக்கினார்

600 லீற்றர் எரிபொருளை சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த ஒருவர் மாத்தறையில் கைது செய்யப்பட்டார் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்து மீள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்கள் இடம்பெறுகின்றன.

மீள் விற்பனை நோக்கத்துக்காக ஓட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்கள் எரிபொருளை பெற்றுக் கொள்ள மீண்டும் மீண்டும் எரிபொருள் நிலையங்களில் நிற்பதை அவதானிக்க முடிந்ததாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.



# கொள்கலன் போக்குவரத்து கட்டணமும் அதிகரிக்கப்பட்டது

நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையை அதிகரிக்க தீர்மானித்தமைக்கு அமைவாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணத்தை 35 சதவீதத்தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வயம்ப பல்கலை மாணவர்கள் 35 பேர் பொலிஸாரினால் கைது

பகிடிவதை சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய வயம்ப மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரி ஒருவரை தாக்கினர் என அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 35 பல்கலைக்கழக மாணவர்களும் செவ்வாய்க்கிழமை காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# சாதாரணதர பரீட்சை எழுதும் மாணவர்கள் மழையால் புத்தளம் மாவட்டத்தில் பாதிப்பு!

நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

எனினும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், ஆரம்பித்துள்ள சாதாரண தரப் பரீட்சை நிலையங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 600 மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர்.

எனினும், அவர்கள் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டு எவ்வித தடங்களுமின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன எனவும் அவர் சொன்னார்.

இதேவேளை, புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட புத்தளம் – மன்னார் வீதி, கடையார்குளம், நூர் நகர் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகளும், புத்தளம் பிரதேச சபைக்கு உட்பட்ட ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி மற்றும் பாலாவி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ள நீர் புகுந்தமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புத்தளம் – கொழும்பு பிரதான வீதி மற்றும் புத்தளம்– மன்னார் பிரதான வீதி என்பனவற்றை ஊடறுத்து வெள்ள நீர் பாய்ந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, புத்தளம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சாஹிரா தேசியப் பாடசாலை, புத்தளம் சென். ஆன்ட்ரூஸ் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் இந்து மத்திய கல்லூரி என்பனவும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

இதனால், மேற்குறிப்பிட்ட மூன்று பாடசாலைகளிலும் நேற்று கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்ற வருகை தந்த மாணவ மாணவிகள் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

திட்டமிட்டபடி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக விருந்த பரீட்சைகள், தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாக 9.45 மணிக்கே ஆரம்பமாகியுள்ளன என மாணவர்கள் குறிப்பிட்டனர்.

புத்தளம் சாஹிரா தேசியப் பாடசாலையில் கீழ் வகுப்பறையில் பரீட்சைகள் நடத்துவதற்காக சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும், வெள்ளம் காரணமாக வகுப்பறைகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் மேற்படி பாடசாலையின் மேல்மாடிப் பகுதியில் சாதாரண தரப் பரீட்சை எழுதுவதற்காக ஒழுங்குகள் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன என பாடசாலையின் அதிபர் குறிப்பிட்டார். புத்தளம் வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், புத்தளம் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், பெற்றோர்கள் ஆகியோருடன் முப்படையினரும் கூட்டாக இணைந்து வெள்ளநீரில் இருந்து இயந்திர படகு சேவை மூலம் மாணவர்களைப் பாதுகாப்பாக கீழ் மாடி வகுப்பறையிலிருந்து மேல்மாடி வகுப்பறைக்கு அழைத்துச் சென்றனர்.

இடியுடன்கூடிய மழை புத்தளத்தில் பெய்யும் என்பதால் மீனவர்கள் மற்றும் கடலில் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ள கடற்படையினர் ஆகியோரை அவதான இருக்குமாறும் கேட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.05.2022இல் வெளியிடப்பெற்றது.